[1973 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பெண் தெய்வம் பற்றிய வினா.

திரு. ஏ. எம். இராஜா : அப்படிப்பட்ட ஆண்டவனுக்கு 10 லட்சம் ரூபாயைக் கொண்டுபோய்ப் போட்டு நகைகளாகப் போடுகிறோம். ஒரு தனிப்பட்டவர் 40 பவுனுக்குமேல் வைத்துக்கொள்ளக்கூடாது, குறைவாகத்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆகவே ஆண்டவனுக்கும் அந்தச் சட்டத்தைக்கொண்டுவந்து இவ்வளவுதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று உச்சவரம்புகொண்டுவந்து, அந்தப் பணத்தையெல்லாம் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆண்டவனேகூட 10, 20 லட்சம் ரூபாயில் வைரக்கிரீடம் செய்வதை விரும்பமாட்டார் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டத்தால் அதைத் தடுக்க முடியாதா என்று கேட்டார்கள். இப்பொழுது சட்டத்தால் தடுக்கிற சூழ்நிலை இல்லை. சட்டங்களும் அதற்குக் கிடையாது. சமுதாயத்தின் நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அறங்காவலர்கள் நிறைய வருகிற பணத்தை, ஆண்டவனும் திருப்தியடைகிற முறையிலே, மதுரை மீனாட்சியம்மன் மனம் குளிரத் தக்க வகையிலே ஏழை எளியவர்கள் நல்வாழ்விற்கான காரியங்களைச் செய்யலாம் என்று அவர்கள் யோசித்து இருக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய பாதுகாப்பிற்கும், மற்றும் சில நாட்டின் நல்ல காரியங்களுக்காகவும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து அதிகப்படியாக தங்கம் கிடைத்து இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாட்டினுடைய பாதுகாப்பிற்காக மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து நிறைய தங்கம் கொடுத்திருக்கலாம். இப்பொழுது கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லை. ஆனால் சென்ற யுத்தத்தின்போது 1965 ஆம் ஆண்டிலே கொடுத்ததாக எனக்கு நினைவு. மதுரை மீனாட்சியம்மனேகூட இப்படிப்பட்ட ஆபரணங்களை விரும்பமாட்டார்கள் என்றுதான் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோயிலும், திருப்பரங்குன்றம் கோயிலும் ஒரே தேவஸ்தானத்தைச் சேர்ந்தவை என்பது அனைவருக்கும் தெரியும். வசூலிக்கப்பட்ட தொகையிலே தாய்க்குமட்டும் வைரக் கிரீடம் வைத்துவிட்டு தனயனைத் தவிக்க விடுவதின் மர்மம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதிலே எந்த மர்மமும் கிடையாது. தாய்க்குச் செய்துவிட்டு மகனுக்கும் செய்யலாம்.

1973 மார்ச் 14]

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மனுக்கு வைரக் கிரீடமும், கவசமும் செய்யப்பட்டிருக்கிறது. அறங்காவலர்கள் வசூலித்து செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் வசூலிப்பதற்கு முன்னால், அரசாங்கத்திடம் அனுமதி பெற்றார்களா ? அல்லது அவர்களே குழுவை அமைத்து வசூலிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். முற்பகல் 10·0

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன். : தலைவரவர்களே, மூன்று வகைகளில் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த திருப்பணிக் குழுவினரும், அறங்காவலர் குழுவினரும், கோவிலுக்கு வருகின்ற பக்தர்கள் இந்தத் திருப்பணிக்காக வைக்கப்பட்ட உண்டியல் வசூலும் ஆக இந்த மூன்று வகையான வசூல்கள் செய்திருக்கிறார்கள். இந்த வசூல்கள் அரசாங்க அனுமதி பெற்று, தணிக்கைக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு செய்யப்பட்டுள்ளன.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மனுக்கு இது போல் வேறு கிரீடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அது பற்றி விவரம் எனக்குத் தெரியாது.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, மதுரை மீனாட்சிக்கு வைரக் கிரீடமாக, வைர அட்டிகையாக, இன்னும் பல கோவில்களுடைய சாமிகளுக்கு இருக்கின்ற நகைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு கோடி இருக்கும். இதைப் பற்றி பொருளாதார நிபுணர்கள் குழு ஏதாவது அமைத்து அதன் கருத்து அறிய இந்த அரசு முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மீனாட்சிக்கு இருக்கின்ற சொத்தின் மதிப்பைச் சொன்னால் காமாட்சிக்குப் பொறாமை ஏற்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, கோவில்களில் இப்படிப் பட்ட விலை மதிப்புள்ள நகைகள் இருப்பதால், குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே, இதைத் தவிர்க்க விலை மதிப்புள்ள நகைகள் செய்யாமல் இருக்கக்கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, விலை மதிப்புள்ள நகைகள் செய்யலாமா என்பது சமுதாய ரீதியில் எழுந்துள்ள பிரச்னை. பாதுகாப்பு ரீதியில் அப்படிப்பட்ட நகைகள் ஒழுங்காக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, நாஸ்திகர்களை அறங்காவலர்களாக நியமிப்பதால் ஆண்டவனுக்குக் கோபம் வந்து, தங்க நகைகள் பித்தளை நகைகளாக மாற்றப்பட்டு விடுகிறது என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?